## பொருளடக்கம்


பக்கம்

**பாலர், ஆரம்ப தர பிரிவுகள்**
**பாலர் தரம் 1, 2, 3 ஆம் தரங்களுக்கானது**

A. **பாலர் பிரிவு :**

A.1 மத்கலுல் குர்ஆன்
A.2 ஆதாபும் அக்லாகும்
A.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா

**தரம் ஒன்று :**

1.1 மத்கலுல் குர்ஆன்
1.2 ஸீறாவும், அக்லாகும்
1.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா

**தரம் இரண்டு :**

2.1 மத்கலுல் குர்ஆன்
2.2 ஸீறாவும், அக்லாகும்
2.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா

**தரம் மூன்று :**

3.1 மத்கலுல் குர்ஆன்
3.2 ஸீறாவும், அக்லாகும்
3.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா
3.4 அஹ்காமுத் தஜ்வீத்

# කුර් - ආන් මද්රසා පාසල් සඳහා විෂය නිර්දේශය

# குர்ஆன் மத்ரஸாக்களுக்கான) பாடத்திட்டம்

# Syllabus for Quran Madrasa

# குறிக்கோள்கள்

1. அல்லாஹ்வை நம்பி எப்பொழுதும் அவனது நினைவுடன் செயற்படுவதை வழக்கமாக்கிக் கொள்வார்.

2. நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வு முறைமையை அறிந்து, அதனைப் பின்பற்றி நடப்பார்.

3. அல்குர்ஆனை அழகாகவும், பிழையில்லாமலும் பக்தியுடனும் ஓதுவார்.

4. சகோதர முஸ்லிம்களோடு பாசத்தோடும், முஸ்லிம் அல்லாதவர் களோடு பரஸ்பரம் புரிந்துணர்வுடனும் நடந்துகொள்வார்.

5. நாளாந்த வாழ்வில் இஸ்லாமிய ஒழுக்கப் பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்வார்.

6. இஸ்லாத்தின் கடமைகளை உணர்வுடன் நடைமுறைப்படுத்துவார்.

7. எப்போதும் ஒரு சிறந்த முஸ்லிமாக, முன்மாதிரியாக நடப்பார்.

# பாலர் பிரிவு - ரௌழதுல் அத்ஃபால்

**(வயது 4-5 வரையானது)**

**A.1 மத்கலுல் குர்ஆன்**

**A.2 ஆதாபும், அக்லாக்கும்**

**A.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா**

# A.1 மத்கலுல் குர்ஆன்

A.1.1 ஒற்றை எழுத்துக்கள்

A.1.2 கூட்டெழுத்துக்கள்

A.1.3 உயிர்க் குறியீடுகள்

A.1.4 குர்ஆன் ஓதுதல்

A.1.5 எழுத்து உச்சரிப்பு

## கற்றல் - கற்பித்தல் வழிகாட்டல்

### A.1.1 ஒற்றை எழுத்துக்கள்

* ஒற்றை எழுத்துக்களை அறிமுகப்படுத்தல்
* தனித்தனி எழுத்துக்களாக மொழியச் செய்தல்
* ஒற்றை எழுத்துக்கள் அடங்கிய பாடலைப் பாடவைத்தல்
* ஒவ்வோர் எழுத்தும் சொற்களின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் இடம்பெறும் மாதிரிகளைக் காட்டும் அறபுச் சொற்களினை நிறமூட்டிக் காட்டி பிரித்து விளங்குமாறு செய்தல்

### A.1.2 கூட்டெழுத்துக்கள்

* தனித்தனி எழுத்துக்களை சேர்த்து எழுதும் முறையை அறிமுகப்படுத்தல்
* அவ்வாறு சேர்த்து எழுதும்போது எழுத்துக்களின் அமைப்பில் ஏற்படும் வேறுபாடுகளை (1.1.4) உடன் தொடர்புபடுத்தி எடுத்துக்காட்டுதல்
* எழுத்துக்களை அவதானிக்கும் பயிற்சிகளை வழங்கி விளக்கம்பெற வழிகாட்டுதல்

**A.1.3 உயிர்க் குறியீடுகள்**

* ஆரம்ப உயிர்க் குறியீடுகளை அறிமுகப்படுத்தல் (பத்ஹத், கஸ்ரத், ழம்மத், ஸுகூன்)
* பத்ஹத் ஆரம்பத்திலும், இடையிலும், இறுதியிலும் இடம்பெறும் முறையினை விளக்கும் பயிற்சிகளை வழங்குதல்
* கஸ்ரத் ஆரம்பத்திலும், இடையிலும், இறுதியிலும் இடம்பெறும் முறையினை விளக்கும் பயிற்சிகளை வழங்குதல்
* ழம்மத் ஆரம்பத்திலும், இடையிலும், இறுதியிலும் இடம்பெறும் முறையினை விளக்கும் பயிற்சிகளை வழங்குதல்
* ஸுகூன் இடையிலும், இறுதியிலும் இடம்பெறும் முறையினை விளக்கும் பயிற்சிகளை வழங்குதல் (பயிற்சிகள் உச்சரிப்பு வடிவிலும் எழுத்து வடிவிலும் வழங்கப்பட வேண்டும்)

**A.1.4 குர்ஆன் ஓதுதல்**

* குர்ஆனின் ஆரம்ப உயிர்க் குறியீடுகள் இடம்பெறும் சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை உச்சரிக்க, எழுதப் பயிற்றுவித்தல்
* மூன்று நான்கு எழுத்துக்கள் கொண்ட சொற்களை உச்சரிக்க, வாசிக்க பயிற்றுவித்தல்
* குர்ஆனில் வரும் பெயர்ச் சொற்களை உச்சரிக்க, வாசிக்க பயிற்றுவித்தல்
* குர்ஆனின் ஆரம்ப உயிர்க் குறியீடுகள் இடம் பெற்றுள்ள அல்குர்ஆன் ஆயத்துக்களைத் தேர்ந்தெடுத்து ஓதப் பயிற்றுவித்தல்

A.1.5 **எழுத்து உச்சரிப்பு**

* தனித்தனியாக ஒவ்வொரு தனி எழுத்தையும் உச்சரிப்பதற்கான பயிற்சி வழங்குதல் (செவியேற்றல், உச்சரித்தல்)
* எழுத்துக்களை ஒன்றிணைத்து மொழியக்கூடிய உச்சரிப்புப் பயிற்சிகளை வழங்குதல்
* ஹுருபுல் ஹல்குகளை எடுத்துக்காட்டி அவற்றை உச்சரிக்கும் முறையினையும் பயிற்றுவித்தல்
* கல்கலாவுடைய எழுத்துக்களையும் அவை உச்சரிக்கப் படும் முறையினையும் செவியேற்றல், உச்சரித்தலூடாகப் பயிற்றுவித்தல்

# A.2 அக்லாக்கும் ஆதாபும்

## A.2.1 நற்குணம்

## A.2.2 பழக்க வழக்கங்கள்

## A.2.3 நடைமுறைகள்

## A.2.4 ஆளுமை விருத்தி

### A.2.1 நற்குணம்

* அல்லாஹ்வுக்குப் பயப்படுதல்
* உண்மை பேசுதல்
* நம்பிக்கையுடன் நடத்தல்

### A.2.2 பழக்க வழக்கங்கள்

* மூத்தோருடன் பழகும்போது
* ஆசிரியர்கள், ஆலிம்களுடன் தொடர்புகொள்ளும்போது
* வீட்டுக்குள் நுழையும்போது
* வீதியில் நடக்கும்போது
* விளையாடும்போது

### A.2.3 நடைமுறைகள்

* காலையில் விழித்தெழுதல்
* காலைக்கடன்களை நிறைவேற்றல்
* உடையணிதல்
* உணவு, பானம் உட்கொள்ளுதல்
* அசுத்தங்களை அகற்றுதல்
* உறங்கச் செல்லல்

### A.2.4 சிறிய சொற்றொடர்களில் பத்து ஹதீஸ்கள் மனனம்

* தொழுகை
* சுத்தம்
* பொறுமை
* வெட்கம்
* அன்பு

### A.2.5 ஆளுமை விருத்தி

* மாணவர்களின் திறன்களை வெளிக்காட்டும் நிகழ்ச்சிகள் - ஆக்கங்கள்
* பாடுதல்
* கதை சொல்லல்
* நடித்தல்
* உரையாற்றுதல்
* வரைதல்
* கை வேலைகள்
* துஆக்கள் - குர்ஆன் ஓதுதல்
* தன்னை அறிமுகம் செய்தல்
* ஸலாம் கூறல், பதில் கூறல்
* சுயமாக செயல்படல்
* குழுவாக இயங்கல்
* தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படல்
* கிராஅத் ஓதுதல்

### A.2.6 களீதாக்கள்

* பிஸ்மில்லாஹ்
* அல்லாஹ்வை நினைவில் கொள்வோம்
* ஸலவாத்துச் சொல்வோம்
* எனது தாய் தந்தை
* அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்

# A.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா

A.3.1 ஈமான்

A.3.2 இபாதத்

A.3.3 குடும்பம்

A.3.4 சமூகம்

A.3.5 பண்பாடு

A.3.6 துஆக்கள்

## A.3.1 ஈமான்

* அல்லாஹ் அறிமுகம்
* முஹம்மது (ஸல்) அறிமுகம்
* அல்குர்ஆன் அறிமுகம்
* மலக்குகள் அறிமுகம்

## A.3.2 இபாதத்

* சுத்தம் பேணுதல்
* கழிவகற்றல்
* பல் துலக்கல்
* உடைச் சுத்தம்

## A.3.3 குடும்ப உறவு - பின்வரும் குடும்ப உறவைப் பேணி நடப்போம்

* தாய்-தந்தையர்
* சகோதர-சகோதரிகள்
* தாய்-தந்தையரின் பெற்றோர்
* தாய்-தந்தையரின் சகோதர-சகோதரிகள்

### A.3.4 சமூகம்

* அயலார்
* உறவினர்
* வகுப்புத் தோழர்

### A.3.5 பண்பாடு

* மனிதர்களை நேசித்தல்
* உயிர்களை நேசித்தல்
* சுற்றாடலைப் பேணுதல்

### A.3.6 துஆக்கள் - சந்தர்ப்ப துஆக்கள்

* நற்காரியங்களை துவங்கும்போது
* அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும்போது
* நபியவர்களின் பெயரைக் கேட்கும்போது
* ஒரு முஸ்லிமை சந்திக்கும்போது
* உதவி செய்தவருக்கு நன்றி கூறும்போது
* சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும்
* தும்மும்போது
* கொட்டாவி விட்டால்
* பிழை பொறுக்கத் தேடும்போது
* மகிழ்வான சந்தர்ப்பங்களின்போது
* அல்லாஹ்வின் வல்லமை வெளிப்படும்போது
* அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடும்போது
* ஒருவரை வழியனுப்பும்போது
* நமது நாட்டம் நிறைவேறினால்
* பதில் ஸலாம் கூறும்போது
* ஒரு விடயத்தை எதிர்காலத்தில் செய்வதாகக் கூறும்போது

# ஆரம்பப் பிரிவு - முதலாம் தரம்

**(ஆறு வயதுக்குட்பட்டோருக்கானது)**

**1.1 மத்கலுல் குர்ஆன்**

**1.2 ஸீறாவும், அக்லாக்கும்**

**1.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா**

# 1.1 மத்கலுல் குர்ஆன்

1.1 மத்துடைய ஹர்புகள்
1.2 இரட்டை உயிர்க் குறியீடுகள்
1.3 நீட்டற் குறியீடுகள்
1.4 ஷத்து - குறியீட்டுப் பிரயோகம்
1.5 குர்ஆன் ஓதல் பயிற்சி

## கற்றல், கற்பித்தல், வழிகாட்டல்

### 1.1 மத்துடைய ஹர்புகள்

* மத்துடைய மூன்று ஹர்புகளையும் அறிமுகப்படுத்தல் (வாவு, அலிப், யாஉ)
* எழுத்துக்கள் நீட்டொலிகளாக வருவதற்கு இடப்படும் குறியீடுகளை உதாரணத்தின் மூலம் எடுத்துக்காட்டுதல்
* மத்துடைய ஹர்புகள் சொற்களின் ஆரம்பத்திலும், இடையிலும், இறுதியிலும் அமையும் தோற்றப்பாடு களை வேறுபடுத்திக் காட்டல் (உதாரணங்கள் மூலம் சுட்டிக்காட்டல்)

### 1.2 இரட்டை உயிர்க் குறியீடுகள்

* இரட்டை உயிர்க் குறியீடுகளை எழுதி அறிமுகப் படுத்தல்
* இரட்டை உயிர்க் குறியீடுகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அவை இடப்படும் இடங்களையும், உச்சரிக்கும் முறையினையும் சொல்லிக் காட்டல்
* சொற்கள் முற்றுப் பெறுமிடங்களில் இரட்டைக் குறியீடுகள் இடப்பட்டிருப்பின் நிறுத்தும்போது உச்சரிக்கும் முறையினை சுட்டிக் காட்டல்

**1.3 நீட்டற் குறியீடுகள்**

* பத்ஹு, கஸ்று, ழும்மு மத்துக்களை அறிமுகப்படுத்தல் (2.1.2) உடன் தொடர்புபடுத்தலாம்
* நீட்டற் குறிகள் முதலிலும், இடையிலும், இறுதியிலும் இடம்பெறும்போது உச்சரிக்கவேண்டிய முறையினைப் பயிற்றுவித்தல்
* மத்து வாஜிப், மத்து ஜாஇஸ் (மத்து முத்தஸில், மத்து முன்பஸில்) என்பன பற்றிய விடயங்களை விளக்கி உதாரணங்களை எடுத்துக் காட்டல், உச்சரித்து செவியேற்க வைத்தல், தாமாக ஓதப் பயிற்சியளித்தல்
* எழுத்திலமைந்திருந்து, மொழியும்போது பயன்படுத்தப் படாத பிரயோகங்கள் பற்றி அறிமுகப்படுத்தல்
* அவ்வாறான பிரயோகங்கள் காணப்படும் சொற்கள், ஆயத்துக்கள் முதலியவற்றை ஓதப்பயிற்றுவித்தல்

**1.4 ஷத்து குறியீட்டுப் பிரயோகம்**

* சொற்களின் இடையிலும் இறுதியிலும் ஷத்து பிரயோகிக்கப்படும் முறை பற்றி உதாரணம் மூலம் சொல்லிக் கொடுத்தல்
* ஷம்ஸிய்யா, கமரிய்யா எழுத்துக்களுடன் ‘அல்’ சேர்த்துப் பிரயோகிக்கும் முறையினை சொல்லிக் கொடுத்தல்
* அல்லாஹ் என்ற சொல்லை வல்லினமாகவும், மெல்லினமாகவும் மொழிவது தொடர்பான விளக்கங்களைக் கூறுதல்
* குன்னா (இராகம்) எடுத்து ஓதுவது பற்றிய சட்ட விதிகளைப் பயன்படுத்தி ஓதப் பயிற்றுவித்தல்
* இத்காம் - ஓர் எழுத்தை மற்றோர் எழுத்தில் புகுத்தி ஓதுவது பற்றிய விதிகளைப் பயன்படுத்தி ஓதப் பயிற்றுவித்தல்
* ஹுருபுல் முகத்தஆத் எனும் சில ஸூறாக்களின் ஆரம்பத்தில் வரும் தனி எழுத்துக்களை மொழிகின்ற முறையினைப் பயிற்றுவித்தல்

**1.5 குர்ஆன் ஓதல் பயிற்சி**

* ‘ஜுஸ்உ’ அம்மவிலுள்ள ஒவ்வொரு ஸூறாவையும் முறையாக ஓதப் பயிற்றுவித்தல்
* ‘ஜுஸ்உ’ அம்மவிலுள்ள சிறிய ஸூறாக்களை மனனமாக ஓதப் பயிற்றுவித்தல்

**1.6 பின்வருவன தொடர்பான அறபுச் சொற்களை அறிமுகப்படுத்தல்**

* உடல் உறுப்புகள்
* குடும்ப அங்கத்தவர்கள்
* வார நாட்கள்
* இலக்கங்கள்
* உணவுப் பொருட்கள்
* ஆடை அணிகள்
* சுட்டுச் சொற்கள் (ழுமாஇர்)
* பாவனையிலுள்ள அறபுமொழிச் சொற்கள் (இலங்கையில்)

# 1.2 ஸீறாவும் அக்லாக்கும்

**1.2.1 அக்லாக்**

**1.2.2 ஸீறா**

**1.2.1 அக்லாக்**

* ஆலிம்களை கண்ணியப்படுத்தல்
* அனாதைகளை ஆதரித்தல்
* ஏனைய சமயங்களை மதித்தல்

**1.2.2 ஸீறா**

* முஹம்மத் (ஸல்) அவர்கள்
* கதீஜா (ரழி) அவர்களை மணமுடித்தல்
* நுபுவ்வத் கிடைத்தல்
* பிரசாரம் செய்தல்
* துக்க ஆண்டு
* ஹிஜ்ரத்

**1.2.3 கஸீதாக்கள்**

* மீலாத்
* அல்குர்ஆன்
* தலஅல் பத்று
* இறை மகிமை பாடுவோம்
* இறுதி நபியின் தோற்றம்
* நல்லவை செய்வோம்

**1.2.4 பின்வருவன தொடர்பான கதைகள்/சம்பவங்கள்**

* சிறுவர் மீது அன்பு செலுத்தல்
* பிராணிகள் மீது இரக்கம் காட்டுதல்

* உடம்பை சீராக வைத்தல்
* அழகாக இருத்தல்
* நபி (ஸல்) அவர்களை நேசித்தல்

**1.2.5 பின்வருவன தொடர்பான நபி (ஸல்) அவர்களின் போதனைகள் (இவ்விரு ஹதீஸ்கள்)**

* சுத்தம்
* கல்வி
* உண்மை உரைத்தல்
* பெரியோரை மதித்தல்
* சிறியோருக்கு இரக்கம் காட்டுதல்

# 1.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா

1.3.1 ஈமான்

1.3.2 இபாதத்

1.3.3 சமூகமும் பண்பாடும்

1.3.4 ஓதல்கள்

1.3.5 துஆக்கள்

### 1.3.1 ஈமான்

* கலிமா தையிபா
* கலிமா ஷஹாதா
* அல்லாஹ்வை புகழ்தல்
* அல்லாஹ்வை வணங்குதல்
* அல்லாஹ்விடம் உதவி தேடல்
* மலக்குகளை நம்புதல்
* மறுமையை நம்புதல்
* நபிமார்களையும் வேதங்களையும் நம்புதல்

### 1.3.2 இபாதத்

* சுத்தமான நீர்
* வுழூச் செய்தல்
* அர்கானுல் இஸ்லாம்
* தொழுகையின் நேரங்கள்
* தொழுகையின் நிலைகள்
* தொழுகையின் முறை

**1.3.3 சமூகமும் பண்பாடும்**

* முஸ்லிம் என்பதன் கருத்து
* வலப்புற, இடப்புற உறுப்புக்களின் பயன்பாடு
* பெருநாட்கள் (ஈதுல் பித்ர், ஈதுல் அழ்ஹா)
* அயலவருடனான உறவு

**1.3.4 ஓதல்கள்**

* ஸூறத்துல் பாத்திஹா
* அல் அதான்

**1.3.5 துஆக்கள்-சந்தர்ப்ப துஆக்கள்**

* குர்ஆன் ஓத ஆரம்பிக்கும்போது
* கோபம் வரும்போது
* குர்ஆன் ஓதமுன்
* தூங்குவதற்குமுன்
* தூங்கி எழுந்ததும்
* ஒருவரை வாழ்த்தும்போது
* வீட்டினுள் நுழையும்போது
* வீட்டிலிருந்து வெளியேறும்போது
* மலசலகூடம் நுழையுமுன்
* மலசலகூடத்திலிருந்து வெளியேறும்போது
* கண்ணாடியில் முகம்பார்க்கும்போது
* வாகனத்தில் பிரயாணம் ஆரம்பிக்கும்போது
* உணவு உண்டபின்
* ஆடை அணியும்போது
* ஒரு முஸ்லிம் மரணித்த செய்தியைக் கேள்வியுற்றால் அல்லது துக்ககரமான செய்தியைக் கேள்வியுற்றால்
* கல்வி கற்கத் தொடங்கும்போது
* புத்தாடை அணிந்தபின்
* ஸஜ்தா திலாவத்தின்போது
* வாகனத்தில் இருக்கும்போது
* ஊரினுள் நுழையும்போது
* கடை வீதியில் நுழையும்போது

# ஆரம்பப் பிரிவு இரண்டாம் தரம்

(ஏழு வயதுக்குட்பட்டோருக்கானது)

1.2.1 மத்கலுல் குர்ஆன்

1.2.2 ஸீறாவும், அக்லாக்கும்

1.2.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா

# 1.2.1 மத்கலுல் குர்ஆன்

## 1.2.1 மக்ரஜ் - அரபு எழுத்துக்கள் வெளியாகுமிடங்கள்

## 1.2.2 வக்பும், அதன் அடையாளங்களும்

## 1.2.3 தர்தீல் முறை

## 1.2.4 திலாவதும், ஹிப்ழும்

## கற்றல், கற்பித்தல், வழிகாட்டல்

### 1.2.1 மக்ரஜ் - அரபு எழுத்துக்கள் வெளியாகுமிடங்கள்

* அரபு எழுத்துக்களின் உச்சரிப்பு வெளியாகும் இடங்களை அறிமுகப்படுத்தல்
* ஒவ்வோர் எழுத்தும் வெளியாகும் இடங்களை சுட்டிக்காட்டி உச்சரித்துக் காட்டுதல், பயிற்றுவித்தல்
* வெளிப்படுத்தியும் (இழ்ஹார்) மறைத்தும் (இக்பா) ஓதவேண்டிய இடங்களை அடையாளப்படுத்தி ஓதப் பயிற்றுவித்தல்

### 1.2.2 வக்பும் அதன் அடையாளங்களும்

* வக்புடைய அடையாளங்களை முஸ்ஹபில் உள்ளதைக்காட்டி அறிமுகப்படுத்தல்
* வக்பு செய்து ஓதுவது பற்றிக் கலந்துரையாடி அதன் விதிமுறைக்கேற்ப ஓதிக்காட்டி ஓதப் பயிற்றுவித்தல்
* தஅவ்வுத் சொல்லுவது பற்றிய ஒழுங்குமுறைகளைக் கற்பித்தல்

* பஸ்மலா சொல்லுவது பற்றிய ஒழுங்குமுறைகளைச் சொல்லிக் கொடுத்தல்
* தஅவ்வுத், பஸ்மலா ஓதல் பயிற்சி மூலம் பிரயோகிக்கச் செய்தல் - பயிற்றுவித்தல்

**1.2.3 தர்தீல் முறை**

* 13 ஆம் ஜுஸ்உ முதல் 29 ஜுஸ்உ வரை ஓதப் பயிற்றுவித்தல்

**1.3.4 திலாவதும் ஹிப்ழும் -**

**1.3.5 பின்வரும் சூறாக்களை மனனமிடல் :**

* சூறத்துல் பாத்திஹா
* சூறத்துல் ஃபலக்
* சூறத்துந் நஸ்ர்
* சூறத்துல் காபிறூன்
* சூறத்துல் கவ்ஸர்
* சூறத்துல் மாஊன்
* சூறத்துல் குறைஷ்
* சூறத்துல் ஃபீல்
* சூறத்துல் ஹுமஸா
* சூறத்துல் அஸ்ர்
* சூறத்துத் தகாதுர்
* சூறத்துல் காரிஆ
* சூறத்துல் ஆதியாத்
* சூறத்துஸ் ஸில்ஸால்
* சூறத்துல் பய்யினா
* சூறத்துல் கத்ர்
* சூறத்துல் அலக்
* சூறத்துத் தீன்
* சூறத்துல் இன்ஷிராஹ்
* சூறத்துல் ழுஹா

**1.3.6 பின்வருவன தொடர்பான அறபுச் சொற்களை அறிமுகப்படுத்தல் :**

* நிறங்கள்
* திசைகள்
* அறபு மாதங்கள்
* ஆங்கில மாதங்கள்
* வீட்டு உபகரணங்கள்
* அன்றாட வழக்கிலுள்ள அரபுச் சொற்கள்

# 1.2.1 ஸீறாவும் அக்லாக்கும்

## 1.2.1 அக்லாக்

## 1.2.2 ஸீறா

### 1.2.1 அக்லாக்

* அல்லாஹ்வை நேசித்தலும் கட்டுப்படலும்
* ஸலாம் கூறலும் பதில் ஸலாம் கூறலும்
* அல்லாஹ்வின் பெயரை நினைவுபடுத்தல்

  - பிஸ்மில்லாஹ்
  - அல்ஹம்துலில்லாஹ்
  - ஸுப்ஹானல்லாஹ்

* சுத்தம் - பின்வருவன தொடர்பானவை :

  - பல்
  - நகம்
  - உடல்
  - உடை

* பின்வருவன தொடர்பான ஒழுக்கங்கள் :

  - உண்ணல்
  - உடையணிதல்
  - மலசலம் கழித்தல்
  - நித்திரை செய்தல்

### 1.2.2 ஸீறா

* முஹம்மத் (ஸல்) அவர்கள்

  - அல்லாஹ்வின் தூதர்
  - பிறப்பும் குடும்பமும்

* கஸீதாக்கள்

- முன்னிலை நபிமார்கள்
- இறை மகிமை
- அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்
- எனது தாய்நாடு
- முஸ்லிம்கள் ஒன்றுபடுவோம்

* பின்வருவன தொடர்பான கதைகள்

- உண்மை பேசுதல்
- நம்பிக்கையுடன் நடத்தல்
- பெரியோரை மதித்தல்
- தாய் - தந்தையருக்கு உதவுதல்

* பின்வருவன தொடர்பான இரு ஹதீஸ்கள்

- ஈமான்
- ஸலாம் கூறல்
- நோன்பு
- அனாதைகளை ஆதரித்தல்
- பொறாமை
- கோள் உரைத்தல்
- கோபம்
- பரிகாசம்

# 1.2.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா

### 1.2.3.1 ஈமான்

### 1.2.3.2 இபாதத்

### 1.2.3.3 சமூகமும் பண்பாடும்

### 1.2.3.4 ஓதல்கள்

### 1.2.3.5 சந்தர்ப்ப துஆக்கள்

**1.3.1 ஈமான்**

* கலிமா தம்ஜீத்
* கலிமா தவ்ஹீத்
* பத்து மலக்குகள்
* ஆதம் (அலை)

**1.3.2 இபாதத்**

* தொழுகையின் செயல் முறைகள்
* தொழுகைக்காக நிய்யத் செய்தல்
* றமழான் நோன்பு - அறிமுகம்
* ஸதகா

**1.3.3 சமூகமும் பண்பாடும்**

* மூத்தோரை கண்ணியப்படுத்தல்

    - தாய்
    - தந்தை
    - ஆசிரியர்/ஆலிம்கள்
    - வயதில் மூத்தோர்

### 1.3.4 ஓதல்கள்

* தொழுகையின் சிறு ஓதல்கள்
  - றுகூஉவில்
  - ஸுஜூதில்
  - இ∴திதாலில்

* பின்வரும் ஸூறாக்கள்
  - இக்லாஸ்
  - பலக்
  - நாஸ்
  - அஸ்ர்

### 1.3.5 சந்தர்ப்ப துஆக்கள்

* காலை நேரத்தில் ஓதும் துஆ
* மாலை நேரத்தில் ஓதும் துஆ
* கெட்ட கனவு கண்டால்
* நோயாளியை நலன் விசாரிக்கும்போது ஓதும் துஆ
* மழை பெய்தபின் ஓதும் துஆ
* நோன்பு திறக்கும்போது ஓதும் துஆ
* பயணம் செய்பவருக்கு மற்றவர்கள் ஓதும் துஆ
* ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைப் புகழும்போது ஓதும் துஆ
* சபை கலையும்போது
* மஸ்ஜிதுள் நுழையும்போது
* மஸ்ஜிதிலிருந்து வெளியேறும்போது
* வீட்டிலிருந்து வெளிப்பட்டுச் செல்லும்போது
* தொழுகையின் ஆரம்பத்தில் ஓதும் துஆ
* ஆடையைக் களையும்போது ஓதும் துஆ
* உரையாற்றுமுன் ஓதும் துஆ
* உரையாற்றியபின் ஓதும் துஆ
* குர்ஆனில் ஸஜ்தாவின்போது ஓதும் துஆ
* தொழுகையில் ஸலாம் கொடுத்தபின் ஓதும் துஆ
* ஷைத்தானையும் அவனது ஊசலாட்டங்களையும் தூரமாக்கும் துஆ

# ஆரம்பப் பிரிவு - மூன்றாம் தரம்

(எட்டு வயதுக்கும் அதற்கு மேற்பட்டோருக்குமானது)

**1.3.1** மத்கலுல் குர்ஆன்

**1.3.2** ஸீறாவும், அக்லாக்கும்

**1.3.3** தர்பிய்யா இஸ்லாமிய்யா

**1.3.4** அஹ்காமுத் தஜ்வீத்

# 1.3.1 மத்கலுல் குர்ஆன்

**1.3.1.1 திலாவதுல் குர்ஆன் ஓதல் பயிற்சி**

**1.3.1.2 தர்தீல், கிறாஅத் முறைகள் பற்றி அறிமுகம்**

**1.3.1.3 நாளாந்தம் ஓதி வரவேண்டிய சூறாக்களை மனனமிடல்**

**1.3.1.4 தொழுகையில் ஓதப்படும் சூறாக்களை தர்ஜுமாவுடன் ஓதப்பயிற்றுவித்தல்**

## கற்றல், கற்பித்தல், வழிகாட்டல்

* **திலாவதுல் குர்ஆன்**

- 01 ஆம் ஜுஸ்உ முதல் 12 ஆம் ஜுஸ்உ வரையான 12 ஜுஸ்உக்களையும் முறையாக ஓதப் பயிற்றுவித்தல்

* **தர்தீல், கிறாஅத் முறைகள் பற்றி அறிமுகம்**

- குர்ஆனை பகுதி பகுதியாக தனித்தனியாக ஓதப் பயிற்றுவித்தல்
- குழு (ஹல்கா) முறையில் ஒருவர் ஓத ஏனையோர் கவனமாக செவியேற்கச் செய்தல்
- ஒலி/ஒளி நாடாக்களின் ஓதலுடன் இணைந்து ஓதிச்செல்ல/ஓதப்படிக்க வழிகாட்டல்
- (சப்உ கிறாஅத்) ஏழு கிறாஅத் முறைகள் பற்றி அறிமுகம் செய்தல்

* **நாளாந்தம் ஓதி வரவேண்டிய சூறாக்களை மனனமிடல்**

- அல்குர்ஆனை ஓதுவதன் சிறப்புக்களை எடுத்துக் கூறல் (ஹதீஸ் ஆதாரங்களுடன்)
- பின்வரும் சூறாக்களை மனனமிடல் :
    - ஸூறத்துல் அஃலா
    - ஸூறத்துல் காஷியா
    - ஸூறத்துல் ஜும்ஆ
    - ஸூறத்துல் முனாபிகூன்
    - ஸூறத்துல் யாசீன்
    - ஸூறத்துல் முல்க்
    - ஸூறத்துல் வாகிஆ
    - ஸூறத்துர் றஹ்மான்
    - ஸூறத்துல் ஸஜ்தா
- பின்வரும் சூறாக்களை தர்ஜமாவுடன் ஓதப்பயிற்று வித்தல் :
    - ஸூறத்துல் பாதிஹா
    - ஸூறத்துந் நாஸ்
    - ஸூறத்துல் பலக்
    - ஸூறத்துல் இக்லாஸ்
    - ஸூறத்துந் நஸ்ர்
    - ஸூறத்துல் காபிறூன்
    - ஸூறத்துல் கௌதர்
    - ஸூறத்துல் மாஊன்
    - ஸூறத்துல் அஸ்ர்
    - ஸூறத்துத் தகாதுர்
    - ஸூறத்துல் காரிஆ
    - ஸூறத்துல் ஆதியாத்
    - ஸூறத்துஸ் ஸில்ஸால்
    - ஸூறத்துத் தீன்
    - ஸூறத்துல் இன்ஷிராஹ்
    - ஸூறத்துழ் ழுஹா
    - ஆயத்துல் குர்ஸி
    - ஸூறத்துல் அஃலா
    - ஆமனர் ரஸூல்

* **பின்வருவன தொடர்பான அறபுச் சொற்களை அறிமுகப்படுத்தல்**

- வகுப்பறை உபகரணங்கள்
- பாடசாலை தொடர்பானவை
- போக்குவரத்துச் சாதனங்கள்
- தொடர்பு சாதனங்கள்
- சூழலில் காணப்படும் பொருட்கள்
- அன்றாட வழக்கிலுள்ள அரபுச் சொற்கள்

# 1.3.2 ஸீறாவும் அக்லாக்கும்

## 1.3.2 அக்லாக்

## 1.3.3 ஸீறா

### 1.3.1 அக்லாக்

* பெற்றோரை மதித்தல்
* உறவினரைச் சேர்ந்து நடத்தல்
* அயலாருக்கு உதவுதல்
* உயிரினங்களிடத்து அன்பு காட்டல்

### 1.3.2 ஸீறா

* நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு செலுத்துதல்
    - நபி அவர்களின் மனைவியர்
    - நபி (ஸல்) அவர்களின் பிள்ளைகளும், பேரர்களும்

* ஸஹாபாக்கள் - அறிமுகம்
    - அபூபக்கர் (ரழி)
    - உமர் (ரழி)
    - உஸ்மான் (ரழி)
    - அலி (ரழி)

* கஸீதாக்கள்
    - நபி (ஸல்) அவர்களின் அற்புத நிகழ்ச்சி
    - குத்ரதுல்லாஹ்
    - பிரார்த்தனை
    - கிதாபி
    - உம்மி
    - சமூக ஒற்றுமை
    - அஸ்ஸுஹுபதாஹ்

* பின்வருவன தொடர்பான கதைகள்/சம்பவங்கள்
    - உழைப்பு
    - கால்நடைகளுக்கு இரக்கம் காட்டல்
    - கடனை அடைத்தல்
    - சமநீதி
    - ஒற்றுமை
    - பிறரை ஏளனமாகக் கருதாமை

* பின்வருவன தொடர்பான நபி (ஸல்) அவர்களின் இரு ஹதீஸ்கள்
    - நற்குணம்
    - அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் வழிப்படல்
    - சமூக ஒற்றுமை
    - தானதர்மம்
    - சமூக சேவை

# 1.3.3 தர்பிய்யா இஸ்லாமிய்யா

**1.3.1 ஈமான்**

**1.3.2 இபாதத்**

**1.3.3 சமூகமும் பண்பாடும்**

**1.3.4 ஓதல்கள்**

**1.3.5 சந்தர்ப்ப துஆக்கள்**

### 1.3.1 ஈமான்

* கலிமா ரத்தில்குப்ர்
* அல்லாஹ்வின் நாமங்கள்
    - அர்ரஹ்மான், அர்ரஹீம், அர்ரஸ்ஸாக்
* அல்லாஹ்வின் பண்புகள்
    - மவ்ஜூதுன், அஹதுன், ஹையுன்
* சுவர்க்கமும் நரகமும்

### 1.3.2 இபாதத்

* தொழுகை : முக்கியத்துவமும் பயனும்
* ஸகாத் : அறிமுகம்
* ஹஜ் : அறிமுகம்

### 1.3.3 சமூகமும் பண்பாடும்

* வயோதிபர்
* நோயாளி
* ஸலாம் கூறுதல்

**1.3.4 ஓதல்கள்**

* ஸூறா அல் கவ்ஸர்
* தொழுகையின் ஓதல்கள்
* வஜ்ஜஹ்து
* முதல் அத்தஹிய்யாத்
* ஸலவாத்து

**1.3.5 சந்தர்ப்ப துஆக்கள்**

* மண்ணறைகளைத் தரிசிக்கும்போது ஓதும் துஆ
* பலமாகக் காற்றடிக்கும்போது ஓதும் துஆ
* இடிஇடிக்கும்போது ஓதும் துஆ
* விருந்தளிப்பவருக்காக விருந்தினர் செய்யும் துஆ
* பிறர் இல்லத்தில் நோன்பு திறப்பவர் ஓதும் துஆ
* கண் திருஷ்டிக்காக ஓதும் துஆ
* புத்தாடை அணிந்திருப்பவரைப் பார்க்கும்போது
* இரவில் தூக்கத்திலிருந்து விழித்து வீட்டை விட்டு வெளிச் செல்லும்போது
* தஹஜ்ஜுத் தொழமுன்
* வுழுச் செய்ய ஆரம்பிக்கும்போது
* வுழுச் செய்து முடிந்ததும்
* மஸ்ஜிதுக்குச் செல்லும் வழியில்
* மஸ்ஜிதில் தவறவிட்ட பொருளைத் தேடுபவரைப் பார்த்த போது
* மஸ்ஜிதில் வியாபாரம் செய்பவரைக் காணும்போது
* அதான் சொல்லக் கேட்டால்
* முஅத்தின் அஷ்ஹது எனக்கூறும்போது
* ஹய்ய அலஸ்ஸலாஹ்.'. ஹய்ய அலல்பலாஹ் எனக் கூறும் போது
* சுபஹுடைய ஸுன்னத் தொழுதபின்
* ஸப்பில் சேரும்போது
* தக்பீர் கட்டியதும்

# 1.3.4 அஹ்காமுத் தஜ்வீத்

## தஜ்வீத் சட்டங்கள்

* **தஜ்வீத் அறிமுகம்**

- தஜ்வீத் என்றால் என்ன ?
- தஜ்வீதின் முக்கியத்துவம்
- அரபு அச்சரங்களும் அவற்றினை உச்சரிக்கும் முறைகளும்
- அஊது, பிஸ்மி, ஸூறத் ஆகியவற்றை ஓதும் முறை
- மகாரிஜுல் ஹுறூபிஷ் ஷம்ஸிய்யா வல்ஹுறூபில் கமரிய்யா

* **ஸ்கூன் செய்யப்பட்ட நூன், தன்வீனுடைய சட்டங்கள்**

- இக்பா∴ : மறைத்தல்
- இத்காம் : இணைத்தல்
- இக்லாப் : புரட்டுதல்
- இழ்ஹார் : வெளியாக்குதல்

* **ஷத்து செய்யப்பட்ட மீமினதும் நூனினதும் சட்டம்**

* **சுகூன் செய்யப்பட்ட மீமுடைய சட்டங்கள்**

- இத்காமுல் மீம்
- இக்பா∴உல் மீம்
- இழ்ஹாருல் மீம்

* **மத்தின் சட்டங்கள்**

- மத்துல் அஸ்லி : அடிப்படை மத்து
- மத்துல் பர்ஈ: கிளை மத்து
- மத்துல் முத்தஸில்
- மத்துல் முன்பஸில்
- மத்துல் லீன்
- மத்துஸ் ஸிலா

* **மத்துல் ஆரிழிஸ் ஸுகூன்**

* **மத்து லாஸிம்**

- மத்துல் லாஸிமுல் கலிமிய்யுல் முஸக்கல்
- மத்துல் லாஸிமுல் கலிமிய்யுல் முகப்பப்
- மத்துல் லாஸிமுல் ஹர்பிய்யுல் முஸக்கல்
- மத்துல் லாஸிமுல் ஹர்பிய்யுல் முகப்பப்
- மத்துல் அஸ்லிய்யுல் ஹர்பி
- மத்துல் பதல்
- மத்துல் இவழ்லிஸ்ஸுகூன்

* **கல்கலா**

- கல்கலா சு.்.றா : சிறிய கல்கலா
- கல்கலா குப்றா : பெரிய கல்கலா

* **அஹ்காமுர்றா : றாவின் சட்டங்கள்**

- கல்கலா சு.்.றா : சிறிய கல்கலா
- தப்கீமுர்றா.். : வல்லின 'றா'
- தர்கீகுற்றா.். : மெல்லின 'றா'
- ஜவாசுல் வஜ்ஹைன் : வல்லினத்துக்கும் மெல்லினத்துக்கும் இடம்பாடான 'றா'

* **லாமுல் ஜலாலா**

- லாமுல் ஜலாலா : வல்லினம்
- லாமுல் ஜலாலா : மெல்லினம்

* **இத்காமுடைய சட்டங்கள்**

- இத்காம் முதமாதிலைன்
- இத்காம் முதழாரிபைன்
- இத்காம் முதஜானிசைன்

* **வக்பு நிறுத்துதல்**

- வக்புல் ஜாயிஸ் : நிறுத்துதல் ஆகுமானது
- வக்புல் கபீஹ் : நிறுத்தக் கூடாதது

* **வக்புடைய அடையாளங்கள்**

- வட்டம்
- மீம் (லாஸிம்)
- தா (முத்லக்)
- ஜீம் (ஜாயிஸ்)
- ஸாய்
- ஸாத்
- காப் (நுக்தா)
- லாம் அலிப்
- கிப்
- ஸக்தா
- வக்பா
- ஸில்
- ஸிலீ
- காப்
- கிலீ

**T-15 ; Raaj**
**CM 007253 Qran Madrasa Syllabus**
**Pages : 1-61**

# අල් කුර්ආන් මද්‍රසා විෂය නිර්දේශය

**(සිංහල, දෙමළ හා ඉංග්‍රීසි මාධ්‍යයන්)**

**මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව**

# அல்குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டம்

**(சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில்)**

**முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

# SYLLABUS FOR QUR AN MADRASA

**(Sinhala, Tamil and English Mediums)**

*DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS*

180, T. B. Jayah Mawatha, Colombo -10
*Sri Lanka.*

# අල් කුර්ආන් මද්‍රසා විෂය නිර්දේශය

**(සිංහල, දෙමළ හා ඉංග්‍රීසි මාධ්‍යයන්)**

**ප්‍රකාශනය**

**මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව**

# அல்குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டம்

**(சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில்)**

**வெளியீடு**

**முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

# SYLLABUS FOR QUR AN MADRASA

**(Sinhala, Tamil and English Mediums)**

# المنهج الدراسي
# للمــدارس القـــــــرآنيــة
# إصدار: إدارة الشؤون الإسلامية
# كولومبو-سريلانكا

***Published by :***

*Department of Muslim Religious and Cultural Affairs*
*180, T. B. Jayah Mawatha,*
*Colombo - 10,*
*Sri Lanka.*





CM 7253-5,000 (02/2007)

**பதிப்பாசிரியர்**

**அல்-ஹாஜ் மௌலவி எம். எச். நூறுல் அமீன் (நத்வி) B. A. (Cey.)**

**சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்**

**முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

| | | |
|---|---|---|
| Title | : | Syllabus for Quran madrasa |
| Editor and Co-ordinator | : | Alhaj Moulavi<br>M. H. Noorul Ameen (Nadhvi) B. A. Cey<br>Senior Cultural Officer<br>Department of Muslim Religius & Cultural Affairs |
| Publisher | : | Director,<br>Department of Muslim Religius & Cultural Affairs<br>180, T. B. Jayah Mawatha,<br>Colombo - 10, Sri Lanka |
| Printer | : | Department of Government Printing,<br>Dr. Danister de Silva Mawatha,<br>Colombo 08 |
| First Edition | : | 2003 |
| Second Edition | : | 2008 |


| | | |
|---|---|---|
| Copy Right | : | Department of Muslim Religius & Cultural Affairs |

# பாடத்திட்டக் குழு

1. **அஷ்ஷெய்க் M.I. அமீர்**
   பணிப்பாளர் -
   முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

2. **மௌலவி J. மீராமொஹிதீன்**
   பிரதிப் பணிப்பாளர் -
   முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

3. **அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மத்**
   பிரதிப் பணிப்பாளர் -
   ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

4. **மௌலவி M.H.M. லாபிர்**
   தலைவர் -
   மத்திய சம்மேளன அஹதிய்யா பாடத்திட்டக் குழு

5. **மௌலவி அல் ஹாபிழ் A.L. அலியார்**
   பணிப்பாளர்,
   தாருல் குர்ஆன் அல்கரீம்

6. **ஜனாப் M.H.M. நாளிர்**
   விரிவுரையாளர் -
   சகாப்தீன் பவுண்டேசன்

7. **மௌலவி M.T.M. இக்பால்**
   ஆசிரிய ஆலோசகர்,
   கொழும்பு மாவட்டம்

8. **ஜனாப் M.H.M. ஹஸன்**
   பிரதம செயற்றிட்ட அதிகாரி,
   தேசிய கல்வி நிறுவகம் - மகரகம

9. **அஷ்ஷெய்க் M.H.M. புஹாரி**
   பிரதம செயற்திட்ட அதிகாரி -
   தேசிய கல்வி நிறுவகம்

10. **மௌலவி M.H. நூறுல் அமீன்**
    சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் -
    முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

# ආගමික කටයුතු ගරු අමාත්‍යතුමාගේ පණිවුඩය

යහපත් සමාජයක් ගොඩනැගීමේදී ආගම හා සාරධර්මයන්ට හිමි වන්නේ අගනා ස්ථානයකි. ශ්‍රී ලංකාවේ පාසල්වල ආගම විෂයයක් වශයෙන් ඉගැන්වෙමින් පැවතුන ද දහම් පාසල් ක්‍රමය ආරම්භ වීමත් සමග සාරධර්ම වර්ධනයෙහි සීඝ්‍ර දියුණුවක් ඇති වූ බව නොරහසකි. අධ්‍යාපනය තුලින් දක්ෂතාවලින් පිරි නිපුණතා පාදක දරුවන් බිහිකළ ද සාරධර්ම හා ආගම අනුගමනය නොකරන තත්වයක් තුල එමගින් කිසිදු ප්‍රයෝජනයක් අත්නොවේ. මෙම කරුණු සැලකිල්ලට ගනිමින් ගත වූ දශක කිහිපය තුල ශ්‍රී ලංකාවේ සියලු ප්‍රදේශයන් හි දහම් පාසල් සංවර්ධනය කිරීමට කටයුතු සම්පාදනය කර ඇත.

සියලු ආගම්වලට හා ජාතීන්ට එකසේ සැලකීම, සියලු ළමුන් ශ්‍රී ලංකාවේ අනාගත පරපුර වශයෙන් අංග සම්පූර්ණ පුරවැසියන් බවට පත්කිරීම යන තේමා මුල් කරගෙන අනෙකුත් ආගමික දහම් පාසල් මෙන් ඉස්ලාම් ආගම ඉගැන්වීම සඳහා අහදියියා දහම් පාසල් පවත්වාගෙන යාම පැසසිය යුතු කරුණකි. එම කටයුතු නිසියාකාරව හා නිවැරදිව ඉදිරියට ගෙන යාමට විධිමත් විෂය නිර්දේශයක් නොමැති වීම මෙතෙක් විශාල අඩුපාඩුවක්ව පැවතුනි. එම අඩුපාඩුව සපුරාලන්නට අපගේ අමාත්‍යාංශය යටතේ ඇති මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව ඉදිරිපත් වීම සතුටට කරුණකි. මෙම කාර්‍යයේ නිරතවුනු සියලු මුස්ලිම් ආගමික විද්වතුන්ට හා මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුවේ නිලධාරීන්ට මාගේ ස්තුතිය පිරිනමමි. අහදියියා පාසල්වල ඉදිරි කටයුතු සාර්ථක වේවා යි ප්‍රාර්ථනා කරමි.

**පණ්ඩු බණ්ඩාරනායක,**
ආගමික හා සදාචාර වර්ධන කටයුතු පිළිබඳ අමාත්‍ය.

ආගමික කටයුතු හා සදාචාර වර්ධන අමාත්‍යාංශය,
අංක 115, විජේරාම මාවත,
කොළඹ 07.

# සුභපැතුම්

මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව මගින් ප්‍රකාශයට පත් කරන අහදියියා (දහම්) පාසල් අවසන් විභාගය සහ ඉස්ලාමීය ධර්මාචාරය අවසන් විභාගය සඳහා පොදු විෂය නිර්දේශ එකතුවට පණිවුඩයක් ලබා දීමට අවස්ථාවක් ලැබීම ගැන මහත් සොම්නසට පත්වන්නෙමි.

සදාචාර සම්පන්න අනාගත පරපුරක් නිර්මාණය කිරීමෙහිලා ආගමික අධ්‍යාපනයට ලැබෙන්නේ අද්විතීය ස්ථානයකි. ඒ සඳහා දායකවන අහදියියා හා ධර්මාචාරය ගුරුවරුන් හට විධිමත් විෂය නිර්දේශයක් ලබාදීම අප කාගේත් යුතුකමකි. එම යුතුකම මැනවින් තේරුම්ගෙන උපරිම ආකාරයෙන් එය ඉටුකිරීමට කටයුතු කිරීම පිළිබඳ මුස්ලිම් ආගමික හා සංකෘතික කටයුතු දෙපාර්තමේන්තුවට මාගේ ස්තුතිය පුද කරමි. සියළු ආගම්වලට අයත් ධර්මාචාර්යවරුන්ට අවශ්‍ය විෂය නිර්දේශ සහ ගුරු පුහුණුව ලබා දීමට කටයුතු කළ යුතුව ඇත. ශිෂ්‍ය ශිෂ්‍යාවන්ගේ පරිහරණය සඳහා විධිමත් පොත් පෙළක් සකසා දීමද වැදගත්වනු ඇත. ඒ සම්බන්ධයෙන් මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව තම වගකීම හඳුනාගෙන ඉටුකරනු ලබන මෙහෙවරට අපගේ පූර්ණ සහය ලබාදෙන බව සතුටින් දන්වා සිටිමි.

**එච්. එම්. හේරත්,**
ලේකම්.

ආගමික හා සදාචාර වර්ධන අමාත්‍යාංශය,
අංක 115, විජේරාම මාවත,
කොළඹ 07.

# முகவுரை

“அல்லாஹ்வின் அடியார்களில் அவனை மெய்யாக அஞ்சுபவர்கள் உலமாக்களே (அறிஞர்களே)” என்ற அல்குர்ஆன் வசனமும், “எவர் அல்-குர்ஆனைத் (தானும்) கற்று அதனை (மற்றோருக்கும்) கற்றுக் கொடுக்கின்றாரோ அவரே உங்களில் சிறந்தவர்” என்ற இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அருள்வாக்கும் இஸ்லாத்தை கற்பதிலும், கற்பிப்பதிலும் ஈடுபட்டிருப்போரின் சிறப்பையும் உயர்வையும் உணர்த்தப் போதிய சான்றுகளாகும்.

முஸ்லிம் உம்மாவின் கேந்திரஸ்தலமாக விளங்கும் மஸ்ஜிதின் நிழலில் இருந்துதான் ஆரம்பகால முஸ்லிம்கள் கல்வியைப் பெற்றனர். இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பக் கல்விப் போதனையும் மஸ்ஜிதில் இருந்துதான் தொடங்கியுள்ளது. கால ஓட்டத்தில் அல்குர்ஆன் பாடசாலைகள், அரபுக் கல்லூரிகள், அஹதிய்யா பாடசாலைகள் என்று பரிணாமம் பெற்று வளர்ந்துள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர், முஸ்லிம் மாணவர்களில் கணிசமான அளவினர் பௌத்த, கிறிஸ்தவ, இந்து பாடசாலைகளில் பொதுக் கல்வி கற்பதை உணர்ந்த எமது முஸ்லிம் தலைவர்கள், இம்மாணவர்களுக்கு இஸ்லாமிய அறிவை ஊட்டுவதற்காக அஹதிய்யா இயக்கத்தை உருவாக்கி அதன் மூலம் அஹதிய்யா பாடசாலைகளை நிறுவினர். நாளடைவில் முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களும் அஹதிய்யா பாடசாலைகளில் இஸ்லாமியக் கல்வியைப் பெறலாயினர். இவ்வாறு வளர்ச்சியுற்ற அஹதிய்யா இயக்கம் இன்று 450 பாடசாலைகளையும் 5,000 ஆசிரியர்களையும் இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்களையும் கொண்ட பேரியக்கமாக மாறியுள்ளது.

போதனா முறையில் ஏற்பட்டு வரும் நவீன மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் குர்ஆன் மத்ரஸாக்கள், அஹதிய்யா பாடசாலைகளின் பாடத்திட்டங்களிலும் கற்றல், கற்பித்தல் செயலொழுங்குகளிலும் சீர்திருத்தங்கள் புகுத்தப்படுவது காலத்தின் தேவையாகும்.

அண்மைக்காலமாக அஹதிய்யா இயக்கமும் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக எல்லாம்வல்ல அல்லாஹ்வின் உதவியினால் இன்று அஹதிய்யா பாடசாலைப் பரீட்சைகள் அரச அங்கீகாரம் பெற்று இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் அஹதிய்யா இறுதிச் சான்றிதழ், இஸ்லாமிய தீனிய்யா சான்றிதழ் என இரு பரீட்சைகள் நடத்தப்படுவது இலங்கை வாழ் முஸ்லிம்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இப்பரீட்சைகளில் சித்தியடைபவர்கள் உயர்கல்வி பிரவேசங்களின்போதும், தொழில் வாய்ப்புக்களுக்கான பரீட்சைகளின்போதும் விசேட புள்ளிகளைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை பொது நிர்வாக அமைச்சும், கல்வி அமைச்சும் மேற்கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

உலமாக்களாலும், கல்விமான்களாலும் தெரிவிக்கப்படும் நல்ல ஆலோசனைகளையேற்று எதிர்காலத்திலும் இப்பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்ய எமது திணைக்களம் தயாராகவே உள்ளது. ஆக்கபூர்வமான வழிகாட்டல்கள் எமக்கு உற்சாகம் தருவனவாக அமையும் என நம்புகிறேன்.

சமய விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சரும் அதிமேதகு சனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும், சமய விவகார அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் திருவாளர் எச். எம். ஹேரத் அவர்களுக்கும், பாடத்திட்டத்தைத் தயாரிப்பதில் பலவகையிலும் உதவிய அஹதிய்யா இயக்கத்தின் தலைவரும், முன்னாள் இலங்கையின் சட்டமா அதிபரும், சனாதிபதி சட்டத்தரணியுமான சிப்லி அஸீஸ் உட்பட அனைத்து அஹதிய்யா இயக்க உறுப்பினர்களுக்கும், பாடத்திட்டக் குழுவில் உழைத்த கல்விமான்களும் இப்பாடத்திட்டம் வெளிவருவதற்கு என்னுடன் கடினமாக உழைத்த திணைக்களத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூருல் அமீன் அவர்களுக்கும், திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் நன்றி கூறுவதுடன் இப்பாடத்திட்டத்தை வெளியிடுவதற்கு தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் தந்துதவிய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளரான அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல் அவர்களுக்கும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளரான அல்ஹாஜ் ஏ. காலிதீன் அவர்களுக்கும் மற்றும் இத்திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் நீர்வளங்கள், வடிகாலமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளருமான அல்ஹாஜ் யூ. எல். எம். ஹாலிதீன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்பாடத்திட்டத்தின் மூலம் முஸ்லிம் மாணவர்கள் பயன்பெற்று இறைவனின் அன்பைப் பெற்ற நல்லடியார்களாக மாறுவதற்கும் அஹதிய்யா பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் இறைவனிடத்தில் அன்பைப் பெறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வஸ்ஸலாம் !

**அஷ்ஷெய்க் எம். ஐ. அமீர்,**
சிரேஷ்ட உதவிச் செயலாளர்.

மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு,
இல. 115, விஜேராம மாவத்தை,
கொழும்பு 07.

# வெளியீட்டுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் றஹீம்

ஈமான் கொண்டவர்களதும் கல்வி அறிவு அளிக்கப்பட்டவர்களதும் பதவிகளை அல்லாஹ் உயர்த்துவான் என்பது இறைவாக்காகும். இவ்வுலகில் ஒரு மனிதனுக்கு அல்லாஹ் நன்மையை நாடினால் அவனுக்கு (தீனில்) மார்க்கத்தில் தெளிவையும், விளக்கத்தையும் வழங்குகின்றான் எனக் கூறிய நபி (ஸல்) அவர்கள் முஸ்லிமான ஆண், பெண் இருபாலாரும் கல்வியைக் கற்பது கட்டாயக் கடமையெனக் கூறி கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.

ஆன்மீக மற்றும் லௌகீகத் துறையில் பூரணத்துவம் வாய்ந்த சமூகத்தை உருவாக்குவதற்கு அல்லாஹ்வின் புனித இல்லங்களான மஸ்ஜிதுகளும், இஸ்லாமிய கல்விக் கூடங்களுமே பாரிய பங்களிப்பினைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஈருலகிலும் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாழ்க்கையொன்றை அமைத்துக் கொள்வதற்கு ஈமான், இறையச்சம், இபாதத் எனும் இறைவழிபாடு, அக்லாக் எனும் நற்பண்பும் நல்லொழுக்கமும் அத்தியாவசியமானவைகளாகும். அவ்வாறானதொரு நேர்த்தியான சமூகத்தை உருவாக்குவதே இஸ்லாமிய ஷரீஆ கல்வியைக் கற்பதன் நோக்கமாகும். இப்பணியினை இலங்கையிலுள்ள இஸ்லாமிய கல்வி நிறுவனங்களான அரபுக் கல்லூரிகளும், அஹதிய்யாப் பாடசாலைகளும், குர்ஆன் மத்ரசாக்களுமே மேற்கொண்டு வருகின்றன.

இஸ்லாமிய சமய நிறுவனங்களாக 450 க்கும் மேற்பட்ட அஹதிய்யா பாடசாலைகளும், 1,500 க்கும் மேற்பட்ட குர்ஆன் மத்ரஸாக்களும் எமது திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றில் 50 ஆண்டுகளுக்குமேல் இஸ்லாமிய சமய போதனைகளை மேற்கொண்டுவரும் அஹதிய்யா பாடசாலைகளுக்கும் குர்ஆன் மத்ரசாக்களுக்குமான ஒரு பாடத்திட்டம் 2003 ஆம் ஆண்டு எமது திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் அஹதிய்யா பாடசாலைகளும் குர்ஆன் மத்ரஸாக்களும் புதிய உத்வேகம் பெற்றுள்ளனவென்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டின் பயனாக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் அஹதிய்யா பாடசாலை மாணவர்களுக்கான இறுதிச்சான்றிதழ் பரீட்சையும் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் அஹதிய்யா போதனாசிரியர்களுக்கான தீனிய்யாத் (தர்மாச்சார) சான்றிதழ் பரீட்சையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் இப்பரீட்சைகள் அரச அங்கீகாரம் பெறுவது மாத்திரமின்றி இஸ்லாமிய ஷரீஆ கல்வியின் வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல் கல்லாகவும் அமையும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இவ்விரு பரீட்சைகளுக்குமான மீள்பரிசீலிக்கப்பட்ட பாடத்திட்டம், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளிவருவது மற்றொரு சிறப்பம்சமாகும்.

2005 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அஹதிய்யாச் சான்றிதழ் இறுதிப் பரீட்சைக்காக எமது திணைக்களம் சுமார் 1.6 மில்லியன் ரூபாவை வழங்கியது. 2008 ஆம் ஆண்டுக்கான தீனிய்யா (தர்மாசார)ச் சான்றிதழ் பரீட்சையை நடாத்துவதற்கான நிதியையும் வழங்குவதற்கு எமது திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஆக்கபூர்வமான, பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றிப் பாதுகாக்கக்கூடிய எதிர்காலச் சந்ததிகளை உருவாக்கும் நன்னோக்குடன் சன்மார்க்கக் கல்வியைப் போதிப்பதன் மூலமே இவ்வாறான இலக்கை அடைய முடியும் என்ற உண்மை இன்று எல்லோராலும் உணரப்பட்டுள்ளது.

இதனால் அறநெறிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் போதானாசிரியர் களுக்கும் பற்பல அனுகூலங்களை நடைமுறைப்படுத்துவது முக்கிய அம்சமாகும் எனக் குறிப்பிடலாம்.

இலங்கை முஸ்லிம் சிறார்களுக்கு சன்மார்க்கக் கல்வியைப் போதிப்பதன் மூலம் ஒழுக்க மேம்பாட்டின் இலக்கை நோக்கிய எமது பயணத்தில் பங்குபெறும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களின் சேவைகளைப் பொருந்திக் கொள்வானாக !

**வை. எல். எம். நவவி,**
பணிப்பாளர்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180, டீ. பி. ஜாயா மாவத்தை,
கொழும்பு 10.

# பதிப்புரை

# குர்ஆன் மத்ரஸா அறிமுகம்

ஒரு மனிதன் முஸ்லிமாக வாழ்வதற்கு இருக்கவேண்டிய தகைமைகளில் அல்குர்ஆனை சரளமாக ஓதும் திறனைக் கொண்டிருத்தல் முக்கியமானதாகும். இத்திறனை பிள்ளைப் பருவத்திலேயே அடைந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் ஏழு வயதாகும்போது ஐங்காலத் தொழுகையை முறையாக நிறைவேற்ற முடியும். தொழுகையில் ஓதப்படும் ஸூறதுல் பாத்திஹா உட்பட அனைத்து ஓதல்களும் அறபு மொழியிலேயே ஓதப்பட வேண்டும் ; என்பதுடன் அவ்வாறில்லாதபோது தொழுகை நிறைவேறாது போய்விடும் என்பதாலும், முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் அங்கு பள்ளிவாசல் ஒன்றை அமைத்துக்கொள்வதுபோல் அதனுடன் இணைந்ததாக குர்ஆன் மத்ரஸா ஒன்றையும் ஏற்படுத்துவது முஸ்லிம் சமூகத்தின் மரபாகும்.

பெரும்பாலும் பள்ளிவாசலில் இமாமாகக் கடமையாற்றுபவரின் நாளாந்த பணிகளில் ஒன்றாக அங்கு இயங்கிவரும் குர்ஆன் மத்ரஸாக்களில் குர்ஆனை கற்பித்தும் கொடுக்கப்படுகின்றது. இதனால் பள்ளியில் பணிபுரியும் இமாம் குறித்த காலத்துக்குள் அப்பிரதேசத்திலுள்ள சிறார்களுக்கு குர்ஆனைக் கற்பித்தாக வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு பாடசாலையில் உள்ளதுபோல வகுப்புக்களோ, மாணவர் தொகைக்கான வரையறைகளோ இல்லை. எவ்வளவு காலத்தில் கற்றுத் தேற வேண்டும் என்ற கட்டுப்பாடும் இல்லை. அதனால் குர்ஆனை ஓதும் திறனைப் பெறுவதற்கு மாத்திரம் ஆறேழு ஆண்டுகள் செல்கின்றன. இது காலத்தை விரயமாக்கும் செயலாகும்.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் வியத்தகு மாற்றங்கள் இக்காலகட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. ஆனால் குர்ஆன் மத்ரஸாக்கள் விடயத்தில் முஸ்லிம் சமூகம் பாராமுகமாயிருப்பது வேதனைக்குரியது. அங்கு கற்பிக்கும் பெரும்பாலான முஅல்லிம்கள் எத்தகைய கற்பித்தல் பயிற்சியையோ, உளவியல் அறிவையோ பெற்றவர்கள் அல்லர். அவர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறையான நிறுவனங்களும் பயிற்சிநெறிகளும் இல்லை. இந்நிலையில் முதன் முறையாக 2003 ஆம் ஆண்டு முதற் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளதுடன் திருத்தப் பதிப்பாக இரண்டாம் பதிப்பு 2008 ஆம் ஆண்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பொதுப் பாடத்திட்டமொன்றை வகுத்தளித்திருப்பது மனதிற்கு ஆறுதலளிக்கும் விடயமாகும். இந்த பாடத்திட்டத்திற்கமைய நான்கு வயது பூர்த்தியானோரே மத்ரஸாவில் சேர்த்துக்கொள்ளப்படுவர். மூன்றாண்டுகளில் அதாவது பிள்ளை ஏழு வயதை அடையும்போது குர்ஆனைப் பிழையின்றி ஓதும் திறனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோல் இலகுவில் குர்ஆனைக் கற்றுக்கொள்ளக் கூடிய வகையில் பாடநூல்களை எழுதுவதற்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கற்பித்தல் துறையில் தேர்ச்சி பெற்ற வளவாளர்களின் துணைகொண்டு தத்தம் பிரதேச குர்ஆன் மத்ரஸாக்களை புனரமைப்புச் செய்து வகுப்பறைக்கான மாணவர்களின் எண்ணிக்கையை வரையறை செய்து போதிய முஅல்லிம்களை நியமித்து இறைமறை அல்குர்ஆனை முறையாக கற்கும் வாய்ப்பினை நமது சிறார்களுக்கு வழங்க பள்ளிவாசல் நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்வாக கட்டமைப்புக்கான ஆலோசனைகளையும், நிர்வாக ஒழுங்குவிதிகளையும், மதிப்பீடுகளையும் மத்ரஸா நிர்வாக உறுப்பினர்களும் முஅல்லிம்களும் கவனத்திற்கு எடுத்துக்கொள்வது மிக முக்கியமானதாகும். மேலும் ஆர்வமுள்ள உலமாக்களும், புத்திஜீவிகளும் இது விடயத்தில் கூடிய கரிசனை செலுத்துவது கட்டாயமாகும்.

குர்ஆனை கற்கும், கற்பிக்கும் பணி பர்ளு ஐன் என்பதால் அது சமூகத்தின் அடிமட்டத்திலிருந்தே கட்டியெழுப்பப்பட வேண்டிய பணியாகும். ஆனாலும் பள்ளிவாசல்களை அமைத்தல், புனரமைத்தல், அறபுக் கல்லூரிகளை உருவாக்குதல் முதலான கடமைகளில் காட்டப்படும் கரிசனை பர்ளுஐனான குர்ஆன் மத்ரஸாக்கள் விடயத்தில் செலுத்தப்படாமை பெரும் மனவேதனை தரும் செயலாகும். குர்ஆன் மத்ரஸாக் கல்வியே இஸ்லாமியக் கல்வியின் அத்திவாரமாகும். அத்திவாரம் சீராக அமையாதுவிடின் சிறந்த முஸ்லிமை எங்ஙனம் உருவாக்கலாம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட கடமைப்படுகிறோம். குர்ஆனை சரியாக ஓதுவதால் மாத்திரம் குர்ஆனின் மீதான எமது கடமை தீர்ந்துவிடாது.

குர்ஆனை ஓதுவதுபோலவே அதன் பொருள் விளங்கி அதன் வழி நடந்து அதனை மற்றவர்களுக்கும் ஏத்தி வைக்கும் போதே குர்ஆனின் பேரிலான எமது கடமை முழுமை பெறும் என்பதை மனதிலிருத்தி செயற்படுவோம். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இது விடயத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு சமூகத்தின் சகல மட்டத்தவர்களதும் ஆலோசனையும் உதவியும் எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணியையும் சேவையையும் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன், உரிய பயனை அடைவதற்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்லருள் பாலிப்பானாக. ஆமீன்.

**மௌலவி எம். எச். நூருல் அமீன்,**
சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்.

முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
இல. 180, டீ. பி. ஜாயா மாவத்தை,
கொழும்பு 10.

# குர்ஆன் மத்ரஸா நிர்வாகக் கட்டமைப்புக்கான சில ஆலோசனைகள்

**மத்ரஸாக் கட்டமைப்பு**

1. குர்ஆன் மத்ரஸாவுக்கு நான்கு வயது பூர்த்தியானவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.
2. குர்ஆனை ஓதக் கற்பதற்கான உச்ச பாடநெறிக்காலம் நான்கு ஆண்டுகளாகும்.
3. ஒவ்வொரு வகுப்புக்குமுரிய மாணவர்களினது எண்ணிக்கை வரையறுக்கப்பட வேண்டும்.
4. ஒவ்வொரு குர்ஆன் மத்ரஸாவிலும் பாலர் பிரிவு தரம் 1, 2, 3 என நான்கு வகுப்புக்கள் அமையும். அவை குறித்த காலப்பகுதியில் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
5. மாணவர்கள் கூட்டாக இயங்கி கற்கும் வகையில் கற்றற் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட வேண்டும்.
6. மத்ரஸா கீதம், மாணவர் சீருடை என்பன அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.
7. குர்ஆன் மத்ரஸாவின் கல்வியாண்டு பிரதி வருடமும் முஹர்ரம் மாதத்தில் அல்லது பொருத்தமான வேறு ஒரு மாதத்திலிருந்து ஆரம்பித்து ஒரு வருடத்தில் முடிவடைய வேண்டும்.
8. குர்ஆன் மத்ரஸாவின் வகுப்புக்கள், பிரிவுகள், தரங்கள் வகுக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் தனியான இடமும் பொறுப்பான முஅல்லிம்கள் நியமிக்கப்படல் வேண்டும்.
9. குர்ஆன் மத்ரஸாவில் சேர்வு இடாப்புக்கள், நாளாந்த வரவுப் பதிவுகள் இடம்பெற வேண்டும்.
10. ஒரு முஅல்லிம் மாத்திரம் கடமையாற்றும் மத்ரஸாவில் நேர அட்டவணை வகுப்பு ரீதியாகத் தயாரிக்கப்பட்டு ஒரு பிரிவுக்கு ஒரு மணிநேரம் ஒதுக்கப்பட வேண்டும். மூன்று வகுப்புக்களிருப்பின் மூன்று மணி நேரத்தை மத்ரஸா நேரமாக வைத்துக் கொள்ளலாம்.
11. ஒன்றரை மணி நேரக் கற்பித்தலில் குறைந்தது இரண்டு பாடங்களாவது நடைபெறல் வேண்டும். (குர்ஆன் வாசிப்பு, தஜ்வீத், கஸீதா என்றவாறு)
12. வாரத்தில் குறைந்தது 5 நாட்களாவது மத்ரஸா நடைபெற வேண்டும்.
13. தொழுகை, வுழூ போன்ற மார்க்கக் கடமைகள் பற்றியவை செய்முறைப் பயிற்சிகள் மூலம் விளக்கப்படல் வேண்டும்.
14. முஅல்லிம்களுக்கான பயிற்சிகள், கைநூல்கள் என்பன தயாரித்து வழங்கப்படல் வேண்டும்.
15. ஒன்றுக்கு மேற்பட்ட முஅல்லிம்கள் கடமையாற்றும் மத்ரஸாக்களில் ஒருவர் அதிபராக நியமிக்கப்படலாம்.

16. இரண்டு வாரத்திற்கு ஒரு முறை மாணவர் மன்றங்கள் நடைபெறல் வேண்டும்.
17. குர்ஆன் மத்ரஸாக்கள் பொறுப்பானவர்களின் மேற்பார்வைக்கு உட்பட வேண்டும்.
18. வாய்மொழி மற்றும் எழுத்துப் பரீட்சைகள் திட்டமிடப்பட்டு தவணை/ வருடாந்த அடிப்படையில் நடத்தப்பட வேண்டும்.
19. பிரதேச மத்ரஸாக்களுக்கிடையிலான கிராஅத் மற்றும் சரிஅத் அறிவு தொடர்பான போட்டிகள் நடத்தப்படல் வேண்டும்.
20. குர்ஆன் மத்ரஸா முஅல்லிம்களுக்கு வாழ்க்கைக்குப் போதுமான சம்பளம் கிடைப்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**நிர்வாக ஒழுங்கு**

1. வாராந்தம் எட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாமல் ஒவ்வொரு வகுப்பிலும் பாடம் நடைபெறல் வேண்டும்.
2. வாரத்தில் ஒரு நாள் விடுமுறை வழங்கப்படல் வேண்டும்.
3. வருடத்தில் விடுமுறைக்கென 40 நாட்கள் ஒதுக்கப்படுகின்றது. 220 தினங்கள் மத்ரஸா நடைபெறல் வேண்டும்.
4. பள்ளிவாசல் பரிபாலன சபையின்கீழ் ஐவர் அடங்கிய குழுவொன்று மத்ரஸா முகாமைத்துவ சபையாக இயங்க வேண்டும்.
5. இம்முகாமைத்துவ சபை குர்ஆன் மத்ரஸாவின் கல்வி, நிதி போன்ற விடயங்களுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
6. முகாமைத்துவ சபையில் பிரதேசத்திலுள்ள மௌலவிமார், ஆசிரியர்கள், அதிபர்கள் என்போரிலிருந்து இருவருக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். அவர்கள் மத்ரஸாவின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மாதம் தோறும் மேற்பார்வை செய்து கல்வி மேம்பாட்டுக்கு உதவ வேண்டும்.
7. வருட இறுதியில் ஆண்டிறுதிப் பரீட்சை நடாத்தப்படல் வேண்டும்.
8. ஆரம்பப் பிரிவு குர்ஆன் மத்ரஸாக்களை மௌலவியாக்களைக் கொண்டு நடாத்த ஏற்பாடு செய்யலாம்.
9. இஸ்லாம் பாடம் போன்றவற்றிற்கு பாடசாலை ஆசிரியர்களின் சேவை பகுதி நேர அடிப்படையில் பெறப்படலாம்.
10. மத்ரஸாவுக்கான நிரந்தரக் கட்டிடம், தளபாடங்கள் என்பன ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

**மதிப்பீடு**

1. மாணவர்களது நடத்தை மாற்றங்கள், அவதானிப்புப் படிவங்கள் மூலம் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.
2. குர்ஆன் மத்ரஸாப் பாடத்திட்டத்தைப் பூர்த்திசெய்த மாணவ மாணவிகளுக்கு குறிப்பிட்ட குர்ஆன் மத்ரஸாவின் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும்.
3. வருடாந்தம் தவணைப் பரீட்சைகள் இரண்டு நடாத்தப்படல் வேண்டும்.
4. பரீட்சைகள் நடாத்தி புள்ளிகள் பதியப்பட்டு அவை பேணப்படல் வேண்டும். மாணவர்களுக்கு வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள் வழங்கப்படல் வேண்டும்.
5. தஜ்வீத், கிராஅத், கஸீதா போன்றவற்றிற்கு ஒலி, ஒளி நாடாக்கள், இறுவட்டுகள் (CDs) பயன்படுத்தப்படலாம்.
6. இஸ்லாத்தின் கடமைகள் பற்றிக் கற்பிக்க ஒலி, ஒளி நாடாக்கள், இறுவட்டுகள் (CDs) பயன்படுத்தப்படலாம்.
7. வருடாந்தம் குர்ஆன் மனனம், ஹதீஸ் மனனம், தஜ்வீத், எழுத்தணி, இஸ்லாமிய அறிவு, அறபு மொழியறிவு என்பன தொடர்பான போட்டிகள் நடாத்தி பரிசும் பாராட்டும் வழங்கப்படல் வேண்டும்.

# කුර්ආන් මද්රසා පාසල් සඳහා විෂය නිර්දේශය

# குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டம்

# Syllabus for Quran Madrasa

# குர்ஆன் மத்ரஸாக் கீதம்

## نشيد المدارس القرآنية

يَا إِلٰهِيْ يَا إِلٰهِيْ     لَكَ الْحَمْدُ يَا إِلٰهِـــــــيْ
يَا إِلٰهِيْ يَا إِلٰهِيْ     لَكَ الشُّكْرُ يَا إِلٰهِـــــــيْ
صَلِّ سَلِّمْ يَا إِلٰهِيْ     عَـــلَى الرَّسُوْلِ خَيْرِ هَــــادِيْ
بَارِكْ وَسَلِّمْ يَا إِلٰهِيْ     عَـــلَى النَّبِيِّ خَيْـــرِ دَاعِـــيْ
يَا إِلٰهِيْ يَا إِلٰهِيْ     اشْرَحْ صَدْرِيْ يَا إِلٰهِـــــيْ
عِلْمًا وَفَهْمًا زِدْ إِلٰهِيْ     أَدَبًا وَنُوْرًا زِدْ إِلٰهِـــــيْ
اغْفِرْ ذُنُوْبِيْ يَا إِلٰهِيْ     ذَنْبَ وَالِدْ ذَنْبَ أُمِّيْ يَا إِلٰهِــيْ
اغْفِرْ وَارْحَمْ يَا إِلٰهِيْ     أَسَاتِيْذَنَا الْكِرَامَ يَا إِلٰهِـــيْ

எந்தன் இறையே எந்தன் இறையே !
எந்தன் இறையே எந்தன் இறையே !
உந்தன் மீதே புகழ்கள் உரித்து,
நன்றிகள் அனைத்தும் சொந்தம் உனக்கே

நன்னெறி காட்டிய தூதர் மீது
மண்ணில் எமக்கு மாண்பினைத் தந்த
அருளும் அன்பும் பொழிவாய் இறையே !
மாநபி மீதருள் மழை பொழி இறையே !
எந்தன் ........................

அகல எந்தன் அகத்தை ஆக்கி ;
ஒழுக்க வெளிச்சம் உயிருள் பாய்ச்சி ;
அறிவு விளக்கை ஏற்றிடு இறையே !
துலக்கமான வழிதா இறையே !
எந்தன் ........................

எந்தன் பாவம் எல்லாம் பொறுத்து
தந்தை தாயின் தவறும் பொறுத்து
தந்தை தாயில் தயவைக் காட்டு
சங்கை மிகு என் ஆசான் மார்மேல்
பொங்கும் கருணை பொழிவாய் இறையே !
எந்தன் ........................

இலங்கை அரசாங்க அச்சுத்திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.